தமிழ்நாடு முழுவதும் தினசரி
பிரிண்ட் ஆகி வெளிவரும்
தினதமிழ்
நாளிதழுக்கு சேலம், கரூர், திருநெல்வேலி, விழுப்புரம், கடலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்டம் மற்றும் தாலுகா நிருபர்கள் தேவை. தொடர்புக்கு
9994466200–9080728304

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 29.12.2025 . மலர் 03 . இதழ் 359. திங்கள்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 29.12.2025 . VOL 03 . ISSUE 359. MONDAY . 4 PAGES . Rs.5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## கரூர் துயர சம்பவம் : தவெக நிர்வாகிகளிடம் டெல்லியில்

# சிபிஐ இன்று விசாரணை

சென்னை, டிச.29-

கரூர் துயரச் சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த வழக்கில், தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உட்பட நான்கு பேர் டிசம்பர் 29 அன்று டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் நேரில் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இன்று இவர்கள் ஆஜராக உள்ள நிலையில் விஜய்க்கு ஆதரவாக ராகுலின் ரைட் ஹேண்ட் ஒருவர் களமிறங்க உள்ளாராம். ராகுலின் ரைட் ஹேண்ட் என்று அழைக்கப்படும் முன்னாள் எஸ்பிஜி அதிகாரி ஒருவர்தான் விஜய்க்கு அறிவுரை வழங்க உள்ளாராம். சிபிஐ விசாரணையில் என்ன பேச வேண்டும்? என்ன ஆதாரங்களை கொடுக்க வேண்டும்? என்று முக்கியமான ஆலோசனைகளை வழங்க உள்ளாராம். ஆளும் திமுக அரசுக்கு எதிரான ஆதாரங்களை விசாரணையில் சமர்ப்பிக்க தவெக திட்டமிட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான உதவிகளை அந்த ரைட் ஹேண்ட் செய்வார் என்று கூறப்படுகிறது. ராகுலுக்கு தெரிந்தேதான் விஜய்க்கு ஆதரவாக இவர் களமிறங்க உள்ளதாக கூறப்படுகிறது. சென்னையில் சிபிஐ ஆபீஸ் உள்ள போது உங்கள் கட்சியினரை டெல்லிக்கு அழைப்பது ஏன்? இதில் எதோ தவறு இருக்கிறது? என்று அந்த ரைட் ஹேண்ட் விஜயிடம் கூறியதாக தோன்றுகிறது.

கரூர் குறித்த விசாரணை சமீப நாட்களில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, தமிழக வெற்றி கழகத்தின் முக்கிய நிர்வாகிகளிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் ஏற்கனவே விசாரணை நடத்தினர். புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சமூக ஊடகப் பொறுப்பாளர் நிர்மல் குமார், ஈரோடு மாவட்டச் செயலாளர் மதியழகன் ஆகியோரிடம் சி.பி.ஐ. சுமார் 10 மணி நேரம் விசாரணை நடத்தியது. எனினும், விசாரணை முழுமையடையாததால், மறுநாள் கரூரில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் கேள்விகள் தொடர்ந்தன. இது விசாரணையின் தீவிரத்தைக் காட்டுகிறது

இதனைத் தொடர்ந்து, விசாரணை மேலும் முன்னேறும் நிலையில், மேற்படி புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார், மதியழகன் ஆகியோர் மீண்டும் விசாரணைக்கு ஆஜராகும்படி சி.பி.ஐ. அறிவுறுத்தியுள்ளது. டிசம்பர் 29 அன்று டெல்லியில் உள்ள அதன் தலைமை



அலுவலகத்தில் கூடுதல் விசாரணை நடைபெறும். விஜய் ஷாக் டெல்லி இந்த விவகாரத்தை தீவிரமாக கையாள்வது விஜய் தரப்பை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளதாம். முக்கியமாக தவெக தலைகளை டெல்லிக்கு வர சொன்னது விஜயை கடுமையான அதிர்ச்சிக்கு தள்ளி உள்ளதாம். டெல்லி இதில் இவ்வளவு கடுமை காட்டும் என்று அவர் நினைக்கவே இல்லையாம்.

கரூர் வழக்கில் சிபிஐ விசாரணை தீவிரம் அடைந்து வருகிறது. தவெக தரப்பு எதிர்பார்த்ததை விட.. இதில் சிபிஐ கடுமை காட்டி வருகிறது. சிபிஐ அதிகாரிகள் வழக்கில் கடுமையான போக்கை கடைப்பிடித்து வருகிறார்கள். இதற்கு சில பெரிய அரசியல் வழக்குகள், நாட்டை உலுக்கிய வழக்குகளில் காட்டிய அதே கடுமையான போக்கை இந்த வழக்கிலும் சிபிஐ கடைபிடிப்பதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. சிபிஐ வசம் போனால்.. வழக்கு அப்படியே அமுங்கிவிடும்.. பொறுமையாகவே நகரும் என்று சிலர் வாதங்களை வைத்தனர். ஆனால் எதிர்பார்க்காத வண்ணம்.. இந்த முறை சிபிஐ மிக "சீரியஸ்" முறையை இந்த வழக்கில் கடைப்பிடித்து வருகிறது.

கடந்த சிபிஐ விசாரணையில் பின் வரும் கேள்விகள்

## நெருக்கடியில் விஜய் - ராகுல் 'கை' கொடுப்பாரா?!

தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், நிர்மல் குமார், ஆதவ் அர்ஜுனா ஆகியோரிடம் வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அதன்படி, கரூர் கூட்டத்தில் பங்கேற்க தொண்டர்கள் எந்தெந்த மாவட்டங்களிலிருந்து வந்தனர்? சென்னையிலிருந்து நாமக்கல் வழியாக கரூர் வந்த விஜயின் பயணத்திட்டத்தை வகுத்தது யார்? செப்டம்பர் 27 அன்று மதியம் 3 மணிக்கு கூட்டம் நடக்க திட்டமிடப்பட்டிருந்தும், நண்பகல் 12 மணிக்கு பேசுவதாக அறிவிக்கச் சொன்னது யார்? விஜய் பேசிக்கொண்டிருந்தபோது ஆம்புலன்ஸ் வந்தபோது, சரியான தகவல் அவரிடம் தெரிவிக்கப்படவில்லையா? கூட்டத்தில் மயக்கமடைந்தவர்கள் மீது தண்ணீர் பாட்டில்கள் வீசப்பட்ட பிறகும் விஜய் ஏன் தனது பேச்சைத் தொடர்ந்தார்? கரூர் கூட்டத்தை கருதி, வேறு இடத்தில் கூட்டம் நடத்த தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளிடம் காவல் துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டார்களா? காவல்துறை அறிவுறுத்தல்களை மீறி, கூட்ட நெரிசலுக்குள் பேருந்தை நகர்த்த உத்தரவிட்டது யார்? நண்பகல் 12 மணிக்கு வருவார் என்று அறிவிக்கப்பட்டு, விஜய் இரவு 7 மணிக்கு வர காரணம் என்ன? தொண்டர்களின் வருகையையும், மற்ற ஏற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பிலிருந்த நிர்வாகிகள் யார்? கூட்டத்தை பெரியதாகக் காட்ட வேண்டும் என்பதற்காக இந்த தாமதம் திட்டமிட்டதா? உள்ளிட்ட கேள்விகள் கேட்கப்பட்டன. சிபிஐ விசாரணையின்போது, நிர்வாகிகள் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்த அதே பதில்களை அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


கூட்டணிக்கு நெருக்கடியா?

ஏற்கனவே கரூர் துயர சம்பவம் நடந்த மறுநிமிடமே கூட்டணி ஆர்வத்தில் விஜய்க்கு ஆதரவாகவும், திமுக அரசுக்கு எதிராகவும் பேசியவர் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி. ஆனால் அவருக்கே ஆப்பு வைக்கும் வகையில் அதிமுகவின் பெருந்தலையான செங்கோட்டையனை தட்டித்தூக்கினார் விஜய். இப்போது சிபிஐயை வைத்து விஜய்யை பாஜக - அதிமுக கூட்டணிக்குள் கொண்டுவர பா.ஜ.க. மேலிடம் முயற்சிப்பதாக கூறப்படுகிறது. இந்த பின்னணியில்தான் தவெக நிர்வாகிகளை டெல்லிக்கு வரவழைத்துள்ளது சிபிஐ.

ஏற்கனவே சிபிஐ விசாரணையை உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான குழு கண்காணிக்கும் என உச்ச நீதிமன்றம் அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. இந்த குழுவிடம் கரூர் வழக்கின் முதல் கட்ட ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி இந்த ரிப்போர்ட்டை ஆய்வு செய்வார். கோர்ட்டில் நடக்கும் வழக்கு விசாரணையின் போது இவரின் பதில் ரிப்போர்ட் தாக்கல் செய்யப்படும். முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகி 1958ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் தேதி பிறந்தார். ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில் புகழ்பெற்ற சிவில் வழக்கறிஞராக இருந்த அவரது தந்தை ஹரிஷ் சந்திர ரஸ்தோகியின் வழியில், 1982ஆம் ஆண்டு சட்டத்துறையில் தனது பயணத்தைத் தொடங்கினார். வழக்கறிஞராக, நீதிபதி ரஸ்தோகி பல சட்டப் பிரிவுகளில் பணியாற்றினார். அதே சமயம், அவர் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சேவைச் சட்டங்களில் முக்கிய கவனம் செலுத்தினார். 1990ஆம் ஆண்டு, ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் நிரந்தர வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட அவர், 2004ஆம் ஆண்டு வரை அப்பதவியில் நீடித்தார். 1999 முதல் 2000 வரை ஜெய்ப்பூரில் உள்ள ராஜஸ்தான் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார். ராஜஸ்தான் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு, 2013ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் தேதி முதல் 2016ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் தேதி வரை மாநில சட்ட சேவை ஆணையத்தின் நிர்வாகத் தலைவராகப் பணியாற்றினார். அவரது தலைமையின் கீழ், இந்த ஆணையம் தேசிய சட்ட சேவைகள் ஆணையத்திடமிருந்து மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தேசிய விருதைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# 'தல'க்கு வலை!

## @ எடப்பாடி பிரசாரத்தில் அஜித் படம்
## @ விஜய் வராததால் நெருக்கடியா?




சென்னை, டிச.29-

சோழிங்கநல்லூரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அஜித் படம் பரிசளிக்கப்பட்ட நிகழ்வு கவனம் ஈர்த்துள்ளது.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பயணத்தின் 6-வது கட்டப் பிரசாரத்தில் திருப்போரூர் தொகுதியில் மக்களை சந்தித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அடுத்ததாக சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருங்குடி, எம்ஜிஆர் பிரதான சாலை திறந்தவெளித் திடலில் பிரச்சாரம் செய்தார்.

இதில் தமிழ்நாடு மாநில பாஜக முன்னாள் தலைவர், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தர்ராஜன், அதிமுக மற்றும் பாஜக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். கூட்டம் நடைபெற்ற பகுதிக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது பிரச்சார வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது அதிமுக தொண்டர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பலரும் அவருக்கு மலர்க்கொத்துகளையும், பொன்னாடைகளையும் அன்பளிப்பாக வழங்கினர்.

அப்போது தொண்டர்கள் சிலர் நடிகர் அஜித் மற்றும் இபிஎஸ் இருவரும் இருக்கும் புகைப்படம் ஒன்றை ஃப்ரேம் செய்து அவருக்கு பரிசளித்தனர். அதனை இபிஎஸ் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்ளும் வீடியோ வைரலாகி வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரக் கூட்டங்களில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடிகள் காணப்பட்டன. இதனையடுத்து விரைவில் அதிமுக கூட்டணியில் தவெக இடம்பெறும் என்று பலரும் கூறிவந்தனர். அதன்பிறகு அதற்கான முன்னெடுப்புகள் எதுவும் நடப்பதாக தெரியவில்லை.

அதிமுகவில் இருந்த செங்கோட்டையனும் தற்போது தவெகவில் இணைந்து விட்டார். இந்த சூழலில் எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரக் கூட்டத்தில் அவருக்கு அஜித் படம் பரிசாக வழங்கப்பட்ட நிகழ்வு கவனம் ஈர்த்துள்ளது. அதிமுக கூட்டணிக்கு விஜய் குட்-பை சொன்னதால் அதிமுக தலைமையின் கவனம் அஜித் பக்கம் சாய்ந்திருப்பதாக கூறப்படுகிறது.

## மதுரை திருப்பரங்குன்றத்தில் ஜி.கே.வாசன் பிறந்தநாள் விழா



மதுரை, டிசம்பர். 29-

மதுரை தெற்கு மாவட்டம் சார்பில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜிகே வாசன் எம்பி 61 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருப்பரங்குன்றத்தை அடுத்த ஹார்வி பட்டியில் அமைந்துள்ள தேவி கருமாரியம்மன் திருக்கோவிலில் சிறப்பு அபிஷேகங்கள் தெற்கு மாவட்ட தலைவர் துரைப்பாண்டியன் தலைமையில் ஜி.அய்யல்ராஜ் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் சிவசுந்தரம், மாநில செயலாளர் எஸ் .கிருஷ்ணமூர்த்தி ,தெற்கு மாவட்ட துணை தலைவர் துரை. நாகராஜன், மாநில செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.துரைராஜா, மாவட்ட இளைஞர் அணி தலைவர் கே.நாகமலை சாமி ,திருப்பரங்குன்றம் வட்டாரத் தலைவர் தவமணி, ஹார்விபட்டி அ.அரவிந்தன், என். ரவிச்சந்திரன்,பிச்சை, முத்து, பிரகாஷ் ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை தொடர்ந்து பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

## டெக்ஸ்டைல் ப்ராசசர்ஸ் பொதுக்குழு கூட்டம்




ஈரோடு, டிச.29-

அசோசியேசன் ஆஃப் ஆல் டெக்ஸ்டைல் ப்ராசசர்சின் அவசர பொதுக்குழு கூட்டம் ஈரோடு சங்கு நகர் பிரிவு பி.எஸ்.பி மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சங்கத்தலைவர் முருகேசன் தலைமை தாங்கினார். செயலாளர் பழனிச்சாமி பொருளாளர் வீரக்குமார், கௌரத் தலைவர் தேவராஜ், துணைத்தலைவர் முருகானந்தம், இணைச் செயலாளர்கள் பெரியசாமி, சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மின்சார கட்டண உயர்வு, தொழிலாளர்களின் கூலி உயர்வு, கழிவு நீர் சுத்திகரிப்பு செலவினங்கள் அதிகரிப்பு மற்றும் விறகு, டைஸ் அன்ட் கெமிக்கல்ஸ் போன்ற மூலப்பொருட்களின் விலை உயர்வு ஆகிய தவிர்க்க முடியாத காரணங்களை கருத்தில் கொண்டு, தற்போது நடைமுறையில் உள்ள கூலியிலிருந்து சுமார் 20 சதவிகிதம் கூலியை உயர்த்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில், ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் உட்பட, ஈரோடு, பவானி, குமாரபாளையம் மற்றும் பள்ளிபாளையம் பகுதிகளைச் சேர்ந்த அனைத்த உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில்
விளம்பரம் செய்து
பயன் பெறுங்கள்!

## சக்திதேவி அறக்கட்டளை சார்பில் ஐம்பெரும் விழா




ஈரோடு, டி.ச.29-

ஈரோட்டில் சக்தி மசாலா நிறுவனங்களின் அங்கமான சக்திதேவி அறக்கட்டளை யின் 26-வது ஐம்பெரும் விழா நடைபெற்றது. விழாவை சரோஜா சுந்தர ராஜ் குத்துவிளக்கு ஏற்றி - தொடங்கி வைத்தார். சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் துரைசாமி வர வேற்றார். இயக்குனர் சாந்தி துரைசாமி முன்னிலை வகித்தார்.சென்னை ஐகோர்ட்டு முன்னாள் நீதி பதி பாட்ஷா சிறப்பு அழைப் பாளராக கலந்துகொண்டு மரக்கன்றுகளை இலவசமாக பெற்று வளர்த்து வரும் தனிநபர்கள், நிறுவனங்களுக்கு மரங்களின் காவலர் விருது, அரிமா அறக் கட்டளை இல்ல மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, சேவை அமைப்புகளுக்கு நிதி உதவி போன்றவற்றை வழங்கி அறக்கட்டளையின் ஆண்டு மலரை வெளியிட்டார். மேலும் அவர் வனம் இந்தியா அறக்கட்டளை நிறுவ னர் ஏ.சுந்தரராஜுக்கு, சுற்றுச்சூழல் துறையில் சாதனை புரிந்தமைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங் கினார்.

விழாவில் ஓய்வுபெற்ற நிதிக்குழு தலைவர் அலாவுதீன் கலந்து கொண்டு தேர்வில், முதல் இடங்களை படித்த மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊ கத்தொகை மற்றும் பரிசுகளை வழங்கினார். பாரதீய வித்யாபவன் பள்ளி தாளாளர் ராம ருஷ்ணன் உயர்கல்வி உதவி தொகைகளை வழங்கினார். இதில் பல்வேறு அமைப்புகளுக் ரூ.1 கோடியே 49 லட்சத்து 1,250 மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டன. முடிவில் தீபா செந்தில்குமார் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை சாமி, செந்தில்குமார் இளங்கோ, வேணுகோபால் ஆகியோர் செய்திருந்தனர்.

# கலசலிங்கம் பல்கலை சட்ட த்துறையின் இலவச சட்ட உதவி முகாம்!




ஸ்ரீவில்லிபுத்தூர், டிச.29-

கிருஷ்ணன் கோவில், கலசலிங்கம் பல்கலை கழகம் தேசிய சேவைப்பணி திட்டம் இணைந்து, வத்றாப், எஸ். கொடிக்குளம் கிராமத்தில், "இலவச சட்ட உதவி முகாம்" நடைபெற்றது. வட்ட சட்டப்பணிக்குழு அலுவலர், செல்வி தமிழ்மணி வழக்றிஞர் ஆர். வீரமணி, முதலாண்டு சட்டத்துறை மாணவர்கள் 60 பேர்,ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மக்களுக்கு சட்ட விழிப்புணர்வு, சட்ட வழிகாட்டுதலை வழஙகினர். பேராசிரியை பொ.சியாமளா அடிப்படை சட்ட உரிமைகள், தீர்வுகள் பற்றி மக்களிடம் விவரித்தார். துறைத்தலைவர் ஆர். ஜி.பாரதி மாணவர்களை வழி நடத்தி நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கத்தின் சார்பில், எடையூரில் இலவச கண் சிகிச்சை முகாம்



திருத்துறைப்பூண்டி, டிசம்பர்.29-

திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கம், பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் திருவாரூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள எடையூர் சங்கேந்தி பி.எஸ்.கே திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இம்முகாமிற்கு சங்கத்தின் தலைவர் (ருக்மணி) மாதவன் தலைமை தாங்கினார். சாசன தலைவர் மரு.முகம்மது ஆரிப்,முன்னாள் வட்டாரத் தலைவர் கண்ணன், உடனடித் தலைவர் தங்கமணி, முன்னாள் தலைவர் சண்முகா கார்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரவிந்த் கண் மருத்துவமனையின் மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் தலைமையில் 20 பேர் கொண்ட மருத்துவ குழுவினர்கள் மூலம் சுமார் 200-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு கண்புரை, கண் அழுத்தம், பார்வை பரிசோதனை, ரத்த அழுத்தம், சர்க்கரை பரிசோதனை, கிட்ட பார்வை மற்றும் தூர பார்வை ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

கண்ணாடி அணிய மருத்துவர்கள் பரிந்துரைத்தை 50-க்கும் மேற்பட்டோர் மிகக் குறைந்த விலையில் கண் கண்ணாடி வாங்கி பயன்பெற்றனர். அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்ட 70-க்கும் மேற்பட்டோர் மற்றும் சிறப்பு கண் பரிசோதனைக்காக 30-நபர்களும் பாண்டிச்சேரி மற்றும் தஞ்சாவூர் அரவிந்த் கண் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்கான அனைத்து செலவினையும் திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கத்தினர் ஏற்றுக்கொண்டனர். “பார்வை என்பது வாழ்க்கையின் ஒளி" என்ற வரிகளுக்கேற்ப,

இந்த முகாம் நூற்றுக்கணக்கான மக்களின் வாழ்வில் புதிய நம்பிக்கையை விதைத்தது. சங்கங்களின் ஒற்றுமை, மருத்துவ குழுவினரின் அர்ப்பணிப்பு, சமூகத்தின் ஒத்துழைப்பு ஆகியவை ஒன்றிணைந்தால் பெரிய மாற்றத்தை சமுதாயத்தில் ஏற்படுத்த முடியும் என்பதை இந்த முகாம் நிரூபித்தது. கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. இதில் முன்னாள் செயலர்கள் ராஜ்மோகன், சிவ குருநாதன், முன்னாள் பொருளாளர்கள் நவீன் குமார், முனைவர் துரை ராயப்பன், மணிவண்ணன், விஜயகுமார், ஆதிரெங்கம் முன்னள் ஊராட்சி மன்ற தலைவர் வீரசேகர், சமூக ஆர்வலர்கள் சேகர்,பக்கிரிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் நூற்றாண்டு அரிமா சங்க செயலாளர் வீரமணி, பொருளாளர் மோகன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

# தருமபுரியில் மிழலை நாடு மக்கள் கட்சியின் பெயர் மற்றும் கொடி அறிமுக விழா




தருமபுரி, டிசம்பர். 29-

தருமபுரியில் தமிழ்நாட்டில் முதல்முறையாக மிழலை நாடு மக்கள் கட்சியின் பெயர் மற்றும் கொடி அறிமுக விழா தருமபுரி ஜோதி மஹாலில் மாவட்ட தலைவர் சித்தன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சரவணன் முன்னிலை வகித்தார். மிழலை நாடு மக்கள் கட்சி மாநிலத் தலைவர் சி. விவேகானந்தன், மாநில பொதுச் செயலாளர் செ. கோவிந்தன், மாநில பொருளாளர் பெ. பச்சமுத்து, மாநிலத் துணைத் தலைவர் இரா. கண்ணன், மாநிலத் துணைச் செயலாளர் கு பிரியாத்குமார், மாநில எஸ்டி அணித்தலைவர் கே. முருகேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு மிழலை நாடு மக்கள் கட்சியின் பெயர் மற்றும் கொடியினை அறிமுகம் படுத்தி சிறப்புரை ஆற்றினார்கள் இந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குருமன்ஸ் ஜாதி சான்றிதழ் தமிழ்நாடு முழுவதும் கிடைக்க ஆவணம் செய்தல். நமது மிழலை நாடு மக்கள் கட்சியின் மூலம் அனைத்து மாவட்டங்களில் உள்ள குருமன்ஸ் மக்களை ஒன்றிணைத்தல். தமிழ்நாடு முழுவதும் உள்ள குருமன்ஸ் பழங்குடி மக்களுக்ககு S.T சாதி சான்றிதழ் உடனே வழங்க வேண்டும். 2026 - ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நமது கோரிக்கைகளை ஏற்கும் பெரிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்தல். 2026 - ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 10 தொகுதிகள் கூட்டணியில் பெற்று தேர்தலை சந்தித்தல். தமிழகத்தில் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட குருமன்ஸ் பழங்குடி மக்கள் இருப்பதை 2026 - ம் ஆண்டு தேர்தலில் மிழலை நாடு மக்கள் கட்சி நிரூபிக்கும்.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆடு வளர்ப்பு நல வாரியம் அமைத்து குருமன்ஸ் எஸ்டி மக்கள் மட்டும் நலவாரிய உறுப்பினர்களாக சேர்த்தல் வேண்டும். குருமன்ஸ் S.T இன மாணவ, மாணவிகளை தமிழக அரசின் அதிகார பதவிகளில் அமர்த்த நமது மிழலை நாடு மக்கள் கட்சி பாடுபடும். குருமன்ஸ் இன மக்களை தொழில்துறையில் வளர்ச்சி மற்றும் மகளிர் சுய உதவி குழு வளர்ச்சி பெற செய்தல். பெருமிழலை குரும்ப நாயனருக்கு மணி மண்டபம் அமைத்து அரசு விழா எடுத்துக் கொண்டாட வழிவகை செய்தல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் மிழலை நாடு மக்கள் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# எல்லை தாண்டி மீன்பிடிப்பு மூன்று மீனவர்கள் கைது



இராமேஸ்வரம்.டிச.29-

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மண்டபம் மீனவர்கள் மூன்று பேரை நெடுந்தீவு கடற்பரப்பில் படகுடன் கைது செய்தது இலங்கை கடற்படை .

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு மீன்பிடி துறைமுகத்திலிருந்து நேற்று காலை 300 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்ற நிலையில் நெடுந்தீவு அருகே மீன் பிடித்து கொண்டிருந்த ஜோசப் என்பவருக்கு சொந்தமான ஒரு படகையும் அதிலிருந்த மூன்று மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்த இலங்கை கடற்படை மீனவர்களை காரைநகர் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று முதற்கட்ட விசாரணை செய்து மீனவர்கள் மூன்று பேரையும் படகுடன் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் ஒப்படைத்தனர்.

இதையடுத்து மூன்று மீனவர்களையும் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகள் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்கள் மூன்று பேரையும் வரும் 7 ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். இதனையடுத்து மீனவர்கள் மூன்று பேரையும் யாழ்ப்பாணத்து சிறையில் அடைக்கப்பட்டனர்.




பரமக்குடியில் தேதிமுக. மாவட்ட மகளிர் அணி சார்பாக இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலிசெலுத்தப்பட்டது. மகளிர் அணி மாவட்ட பொறுப்பாளர் செல்வி தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# ஜெகதேவி ஊராட்சியில் பொது வழி ஆக்கிரமிப்பு நோய் பரவும் ஆபத்து...!




கிருஷ்ணகிரி, டிச.29-

பர்கூர் அருகே ஜெகதேவி ஊராட்சியில் பொது வழி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாலும், சாலையில் கழிவுநீர் விடுவதாலும் நோய் தொற்று பரவுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த ஜெகதேவி ஊராட்சி பாகிமானூர் கிராமத்தில் இரண்டு தலைமுறைகளாக பயன்படுத்தி வந்த பொது பாதையை அதே கிராமத்தைச் சேர்ந்த அமரா பஞ்சமணி ஆகிய இருவரும் பொது வழியை ஆக்கிரமித்து பயன்படுத்தி வருகின்றனர். இந்த பொதுப்பாதையில் வருவோரை மிரட்டியும் பொது வழியில் கழிவுநீர் மற்றும் சாக்கடைகளை விடுகின்றனர். இதனால் அவ்வழியாகச் செல்லும் பள்ளி மாணவர்கள் அந்த சாக்கடை கழிவுகளை மிதித்துச் செல்வதாலும், கொசு உற்பத்தி அதிகரித்து நோய் தொற்று பரவி வருகிறது. மேலும் தற்போது குளிர்காலம் என்பதால் கொசுக்களால் பரவும் டெங்கு மலேரியா போன்ற கொடிய நோய்கள் அதிக அளவில் பரவும் முன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக பலமுறை மனு அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க தயங்கி வருவதாக குற்றம் சாட்டுகின்றனர். துறை சார்ந்த அலுவலர்கள் உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளி மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் கூறுகின்றனர்.

# காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்தின் இரண்டாவது நினைவு நாள்



கிருஷ்ணகிரி, டிச.29-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் தேமுதிக நிறுவனதலைவர் கேப்டன் விஜயகாந்தின் இரண்டாவது நினைவு நாளை முன்னிட்டு ஒன்றிய தேமுதிகவினர் அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்

தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் இரண்டாவது நினைவு தினம் தேமுதிக கட்சியினரால் அனுசரிக்கப்பட்டு வருகிறது. தேமுதிக கழகப் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.சின்னராஜ் அவர்களின் ஆலோசனைபடி கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேருந்து நிலைய வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கேப்டன் விஜயகாந்தின் உருவப் படத்திற்கு காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றிய செயலாளர் விஜய்வல்லரசு தலைமையிலும், ஒன்றிய அவைத்தலைவர் கே.எஸ்.காளியப்பன், ஒன்றிய பொருளாளர் மாதையன், நகர கழகச் செயலாளர் கே.எஸ்.அன்வர், பொதுக்குழு உறுப்பினர்களான கே.பி.ரஞ்சித்குமார், கே.எஸ்.காதர், ஆகியோரது முன்னிலையிலும், இந்த குருபூஜையில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட அவை தலைவர் எல்.முருகன் உள்ளிட்ட ஏராளமான தேமுதிகவினர் கலந்துகொண்டு அங்கு பிரம்மாண்டமாக அலங்கரிக்கபட்ட விஜயகாந்தின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். பின்னர் அங்கு கூடியிருந்த பொதுமக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர்களான பி.சி.குமார், சண்முகம், சுந்தரேசன், மாவட்ட பிரதிநிதி கணேசன், அமிர்தலிங்கம், பொருளாளர் வேடியப்பன், ஜி.கே.எஸ் பழனி, முருகேசன், மின்னல் வேடி, மூர்த்தி, பாலாஜி, சக்திவேல், மகளிர் அணியை சேர்ந்த வைஜெயந்திமாலா, ஆட்டோபழனி, குரு, ரவி, சைபுல்லா, ராஜா, பச்சையப்பன், எஸ்.எம்.சக்திவேல், பெரியசாமி, வீரவேல், கத்தேரி, முருகன், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கல்லல் பகுதியில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட சிறப்பு மருத்துவ முகாம் : அமைச்சர் பெரியகருப்பன் நல உதவிகள் வழங்கினார்!




சிவகங்கை, டிச.29–

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம், சேது இராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நான்கரை ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவது மட்டுமன்றி, அனைத்து அரசு துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையில் சிறப்பான நிர்வாகத்தினை தமிழகத்தில் ஏற்படுத்தி, தமிழகத்தினை முன்னேற்ற பாதையில் வழிநடத்தி வருகிறார்.

உழைப்பிற்கு உதாகரணமாக திகழ்ந்து தமிழகத்தினை தலைசிறந்த மாநிலமாக உருவெடுக்கச் செய்து, முதன்மையான முதலமைச்சராகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில், தொலைநோக்கு சிந்தனையுடன் மக்களுடைய தேவைகள் அறிந்து, அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே திட்டங்களை அறிவித்து, மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ள நல்லரசாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு திகழ்ந்து வருகிறது.

அரசின் அனைத்து துறைகளும் சிறப்பு பெறுவது மட்டுமன்றி, அதில் குறிப்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் வரும்முன் காப்போம் என்ற அடிப்படையில், பல்வேறு சிறப்பு திட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, பொதுமக்களின் நலனை பேணிக் காக்கின்ற அரசாகவும் தமிழக அரசு திகழ்ந்து வருகிறது. அதில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டமானது கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழகம் முழுவதும் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் 39 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, பிரதிவாரம் சனிக்கிழமைதோறும் மாவட்டத்தின் குறிப்பிட்ட வட்டார பகுதிகளில் இம்முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்றையதினம் கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம் பகுதியில் 21–வது சிறப்பு மருத்துவ முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. இனிவரும் காலங்களில் பிரதி வாரந்தோறும் இரண்டு முகாம்கள் நடத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் ஒவ்வொரு முகாம்களின் வாயிலாக சுமார் 1,500 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், முகாம் நடைபெறும் இடங்களுக்கு வருகை புரிய இயலாத மாற்றுத்திறனாளிகளை அழைத்து வருவதற்கென வாகன வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டு, அதன் வாயிலாக மாற்றுத்திறனாளிகள் கண்டறியப்பட்டு, இம்முகாம்களில் பங்கேற்று பயன்பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடதக்கதாகும்.

இம்முகாம் தொடர்பாக இன்றையதினம் முன்னாள் மத்திய அமைச்சர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினரான திரு.ப.சிதம்பரம் அவர்களும் இம்முகாமினை நேரில் பார்வையிட்டு, சிறப்பித்துள்ளார். இம்முகாமின் வாயிலாக பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்குவதற்கென மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பாராட்டியுள்ளார். இம்முகாமில், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பான பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் அடிப்படையில், உலக தரத்திற்கு இணையான மருத்துவ சேவைகளை வழங்கி வரும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

குறிப்பாக, தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அனைத்து மருத்துவ கட்டமைப்புக்களும், மருத்துவ உபகரணங்களும், தரமான சிகிச்சைகளும், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகியவைகளில் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, பிரதி வாரந்தோறும் அந்தந்த பகுதிகளில் நடைபெற்று வரும் இம்முகாமினை பொதுமக்கள் சிறந்து முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது உடல் நலத்தினை பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், 12 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மூலம் 6 மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு பேருந்து மற்றும் ரயில் பயண அட்டைகளும், 1 மாற்றுத்திறனாளி மாணவருக்கு அடையாள அட்டையும் மற்றும் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,500/– மதிப்பீட்டில் மூளை முடக்குவாத சிறப்பு சக்கர நாற்காலியும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,938/– வீதம் இரண்டு முழங்கை தாங்கிகளும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.594/– மதிப்பீட்டில் தோள்பட்டை தாங்கியும், 35 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டைகளும், 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரயில் பயண சலுகை அட்டைகளும், 6 மாற்றுத்திறனாளிகளுக்கு பேருந்து பயண சலுகை அட்டைகளும், 95 மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ பயண சலுகைக்கான அட்டைகளையும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ) மரு.அருள்தாஸ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, மாவட்ட கல்வி அலுவலர் திரு.செந்தில்குமார், சேது பாஸ்கரா கல்வி குழும தலைவர் சேதுகுமணன், திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம், வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஜெ.ஆல்வின், சேது இராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் ரொசரியோ மற்றும் மருத்துவத்துறையை சார்ந்த அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவிலில் நிலவேம்பு குடிநீர் வழங்கும் நிகழ்ச்சியை ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார்!



சங்கரன்கோவில், டிச.29-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பேருந்து நிலையம் அருகே மெயின் ரோட்டில் வைத்து சங்கர் பவுண்டேசன் சார்பில் நிலவேம்பு குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதில் சங்கரன்கோவில் திமுக நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் ஜலால், தமுமுக தீன் மைதீன் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை சங்கர் பவுண்டேசன் நிர்வாகிகள் ஆசிரியர் ஆத்தி விநாயகம், ராமசுப்பிரமணியன்,அந்தோணிஜோசப், நமச்சிவாயம், விக்கி, தர்ம ராஜ், சுகாஷ், பிரியமனோஜ், பிச்சுமணி,ஆனந்த், பாலசுப்பிரமணியன்,மாணிக்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

# தனியார் பள்ளி பேருந்துகளில் கலெக்டர் நேரில் ஆய்வு



கோவை. டிச.29-

கோவை மாவட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளை அழைத்து வரவும் பள்ளி முடிந்து வீட்டுக்கு கூட்டி செல்லவும் தனியார் பள்ளிகள் பஸ் வேன் உள்ளிட்ட வாகனங்கள் பயன்படுத்தி வருகின்றன வாகனங்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா அவற்றில் போதிய வசதி செய்யப்பட்டுள்ளதா ஆபத்தான காலத்தில் அவசர வழி உள்ளதா என்பது குறித்து கலெக்டர் பவன் குமார் பிஆர்எஸ் மைதானத்தில் ஆய்வு செய்தார். தனியார் பஸ்களில் ஏறி ஆய்வு நடத்தி கலெக்டர் அங்குள்ள ஒரு வேனில் பொருத்தப்பட்டிருந்த சுத்தியலை எடுத்து அவசர உதவி கதவை தட்டி பார்த்து ஆய்வு செய்தார் மேலும் பள்ளி வாகனங்களில் முதலுதவி மருந்துகள் மற்றும் போதிய இருக்கைகள் செய்தியாக பொருத்தப்பட்டுள்ளதா வாகனங்களுக்கு உரிய ஆவணங்கள் உள்ளதா என்று விசாரணை நடத்தினார்.

குறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில்

கோவை மாவட்டத்தில் உள்ள 4 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட 1644 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டது இதில் 2 தனியார் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யும் பொழுது நிர்ணயிக்கப்பட்ட விதிகள் குறைபாடுகள் கண்டறியப்பட்டதால் அவற்றுக்கான அனுமதியை ரத்து செய்துள்ளோம் பள்ளி வாகனங்கள் இயக்கும் டிரைவர்கள் உடல் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் விஸ்வநாதன் ,பூங்கோதை மற்றும் அனைத்து வட்டார அலுவலர்கள், காவல் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# தமிழ்நாடு அரசு அனைத்து துறை பணியாளர்கள் சங்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம்



வேலூர், டிச.29

தமிழ்நாடு அரசு அனைத்து துறை பணியாளர்கள் சங்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் புஷ்பம்மாள் ஞானசம்பந்த திருமண மண்டபத்தில் நடைபெற்றது மாநில தலைவர் பாஸ்கர் தலைமை தாங்கினார் மாநில கவுரவத் தலைவர் ராஜவேலு மாநில பொது செயலாளர் பாலாஜி சிங் சட்ட ஆலோசகர் பிரபாகர் ஆகியோர் முன்னிலையில் பொதுக்குழு நடைபெற்றது பொதுக்குழுவில் தலைமை உரையாக மாநில கவுரவத் தலைவர் ராஜுவேல் அவர்கள் தமிழக அரசிடம் அனைத்து துறை பணியாளர்கள் சங்கத்தின் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார் அதனை தொடர்ந்து மாவட்ட கௌரவ தலைவர் சம்பத் தாண்டாமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர் கூட்டத்தில் பதினாறு அம்ச கோரிக்கை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தமிழக அரசு பணியாளர்களுக்கு முன்பு போலவே பழைய ஓய்வுதம் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்ய இந்த தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது மத்திய அரசு போலவே மாநில அரசும் எட்டாவது ஊதிய குழு அமைத்து அதன்படி 1/1/ 2026 முதல் வழங்க தமிழக அரசை இந்த பொதுக்குழு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றது தமிழகத்தில் காலியாக உள்ள சுமார் 4 லட்சம் பணியிடங்களை நிரப்ப கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் பேரூராட்சிகளில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களுக்கு தின கூலியாக ரூபாய் 600 ஆக உயர்த்தி வழங்கிட வேண்டி கேட்டுக் கொள்கிறது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து சங்க நிர்வாகிகளும் அழைத்து பேசி அவர்களின் குறைகளை தீர்த்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறது இந்த பொதுக்குழு முடிவில் மாவட்ட அமைப்பு செயலாளர் மதன்குமார் நன்றி உரையாற்றினார்



**கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கண்டரமாணிக்கணீம் பகுதியிலுள்ள வாக்குச்சாவடி மையத்தில் நடைபெற்ற வாக்காளர்களுக்கான சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் திருப்பத்தூர் வட்டாட்சியர் /உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மாணிக்கவாசகம் உட்பட பலர் உள்ளனர்.**




# குளச்சலில் காதலனை தேடி வீட்டிற்கு சென்ற இளம்பெண் : மகளை கடத்தியதாக நாடகமாடிய தாய்



குளச்சல், டிச.29-

திற்பரப்பு பகுதியை சேர்ந்தவர் நாகப்பன் மகள் நிஷாந்தி (24). இவர் குலசேகரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு கூடத்தில் வேலை பார்த்து வருகிறார். இவரது பாட்டி வீடு குளச்சலில் உள்ளது. பாட்டி வீட்டிற்கு வரும் போது அதே பகுதியை சேர்ந்த அபினாஷ் ( 27) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு, காதலித்து வந்தனர். அபினாஷ் கல்குளம் தாலுகா அலுவலகத்தில் நில அளவையர் வேலை பார்த்து வருகிறார். இவரது காதலுக்கு நிஷாந்தி வீட்டினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் நிஷாந்திக்கு வேறு மாப்பிள்ளை பார்த்து ஜனவரி மாதம் 12ஆம் தேதி நிச்சயதார்த்தம் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வேலைக்கு செல்வதாக வீட்டில் கூறி விட்டு வெளியே சென்ற நிஷாந்தி நேராக குளச்சல் உள்ள காதல் அபினாஷ் வீட்டிற்கு சென்றார்.

இதையடுத்து நிஷாந்தியின் தாய் குளச்சல் போலீசில் புகார் செய்தார். போலீசில் தனது மகளை கடத்தி சென்றதாக புகார் அளித்தார். இதை அடுத்து நிஷாந்தியும் அவரது காதலனும் குளச்சல் காவல் நிலையத்தில் வந்து தங்களை யாரும் கடத்த வில்லை, வீட்டில் வேற இடத்தில் மாப்பிள்ளை பார்த்தால் அபினாஷை திருமணம் செய்ய முடிவு செய்து வீட்டில் இருந்து வெளியேறியதாக தெரிவித்தார். இதை அடுத்து இரு தரப்பு பெற்றோரும் காவல் நிலையத்தில் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். மகளைப் பார்த்த தாய் நிஷாந்தியின் காலில் விழுந்து தன்னுடன் வருமாறு கெஞ்சினார். ஆனால் மகள் காதலனுடன் செல்வதில் உறுதியாக இருந்தார். இறுதியில் போலீசார் காதலர்களை இணைத்து அனுப்பி வைத்தனர். மகளை கடத்தியதாக நாடகமாடிய தாயை போலீசார் எச்சரித்து அனுப்பினார்.

# ஒரு சிகரெட் விலை ரூ.72 ஆக உயர்கிறது

**புதுடெல்லி, டிச.29–**

**இந்தியாவில் சிகரெட் மற்றும் புகையிலைகளின் விலைகள் உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.**

**மத்திய அரசின் கலால் சட்டத்திருத்தத்தால், ஒரு சிகரெட் விலை ரூ.18–ல் இருந்து ரூ.72ஆகவும், புகையிலை மீதான வரிகள் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் ஆகவும் உயர வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. மத்திய கலால் (திருத்த) மசோதா, 2025 நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்து. அது சட்டமாக மாறும்பட்சத்தில் இந்தியாவில் சிகரெட் மற்றும் புகையிலைகளின் விலைகள் உயரும். நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சவுத்ரி அறிமுகப்படுத்திய இந்த மசோதா, சிகரெட் மற்றும் சுருட்டுகள் முதல் ஹூக்கா மற்றும் மெல்லும் புகையிலை வரை பல்வேறு புகையிலை பொருட்களின் மீதான கலால் வரிகளை திருத்துகிறது. அதாவது இந்தப் பொருட்கள் மீதான கலால் மற்றும் வீத வரியை உயர்த்துகிறது. இந்தத் திருத்தத்தின் கீழ், சிகரெட்டுகளுக்கு 1,000 குச்சிகளுக்கு ரூ.200–735 வரை இருந்த கலால் வரி ரூ.2,700ஞ்11,000 ஆக உயரும், இது வகை மற்றும் நீளத்தைப் பொறுத்து இருக்கும். மெல்லும் புகையிலை மீதான வரிகள் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை நான்கு மடங்கு அதிகரிக்கும், ஹூக்கா புகையிலை 25 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை உயரும். மேலும் புகைபிடிக்க பயன்படுத்தும் குழாய்கள் மற்றும் புகையிலைக் கூறுகளின் கலவைகளுக்கான வரி ஐந்து மடங்கு அதிகரிக்கும், அதாவது 60 சதவீதம் முதல் 300 சதவீதம் வரை அதிகரிக்கும். இன்று ரூ.18 விலையில் உள்ள ஒரு சிகரெட்டின் விலை விரைவில் ரூ.72 ஆக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.**

# கஞ்சா கடத்தல் மற்றும் ரவுடியிசத்தில் ஈடுபட்ட இருவர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைப்பு

**முத்துப்பேட்டை, டிசம்பர்.29–**

**திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் 1.2 கிலோ கஞ்சாவை வீட்டில் பதுக்கி வைத்திருந்த இருவர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.**

**மணல்மேடு, வடகாடு, கோவிலூர், மற்றும் பெருகவாழ்ந்தான் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக ரவுடியிசம், திருட்டு மற்றும் வழிப்பறி போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வந்த பாலையூர், கொம்புகாரன் தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் மகேஷ்(வயது 43), ராஜப்பா மகன் அசோக் குமார் (வயது 33) ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். மேற்படி, நபர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பரிந்துரை செய்ததின் பேரில், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன் இருவரையும் குண்டர் சட்டத்தில் அடைக்க உத்தரவிட்டார். ஆட்சியரின் உத்தரவின்படி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ், இருவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.**

**திருவாரூர் மாவட்டத்தில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் ரவுடியிசத்தில் ஈடுபடும் நபர்கள், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கஞ்சா, தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை, மது விற்பனை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் எச்சரித்துள்ளார்.**

# மதுரையில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜிகே வாசன் பிறந்த நாளை முன்னிட்டு பிரசித்தி பெற்ற கோயில்களில் சிறப்பு வழிபாடு



மதுரை, டிசம்பர். 29-

மதுரையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜிகே வாசன் எம்பி யின் 61 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கூடல் அழகர் பெருமாள் கோயிலில் மாநில பொதுச் செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கேஎஸ்கே ராஜேந்திரன் தலைமையில்

மாவட்டத் தலைவர்கள் ராஜாங்கம், நடராஜன், ஆகியோர் முன்னிலையில் சிறப்பு வழிபாடு செய்தனர். அதன் தொடர்ச்சியாக தெற்கு வாசல் பள்ளிவாசல் சென்மேரிஸ் சர்ச் ஆகிய தளங்களில் வழிபாடு செய்து அதன் பின்னர் பூங்கா முருகன் கோயிலில் தங்கத் தேர் இழுத்து கட்சித் தலைவருக்கு பூரண உடல் நலம் வேண்டி நீண்ட ஆயுள் ஆரோக்கியம் தரவேண்டியும் சிறப்பு பிரார்த்தனைகள் செய்தனர். இதனை முன்னிட்டு பொதுமக்களுக்கு கட்சியின் சார்பில் பொதுமக்களுக்கு வேஷ்டி சேலைகள் மற்றும் அன்னதானங்கள் வழங்கப்பட்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் பைரவ மூர்த்தி கல்வத் நூருதீன் கரிமேடு மணி சீனிவாசன் ஸ்ரீமான் பிரேம்குமார் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் லயன்ஸ் சண்முகம், சந்திரன், சர்க்கிள் கமிட்டித் தலைவர் விரகனூர் சக்திமுருகன், உட்பட வார்டு தலைவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

# மாநில அளவிலான கராத்தே போட்டியில் சட்ட உரிமை பாதுகாப்பு சங்கம் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்



ஈரோடு, டிசம்பர்.29-

செல்லாயம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற காரத்தே போட்டியில் மாநில அளவிலான KARATE &DO GOJU-KAN ASSOCIATION STATE LEVAL OPEN CHAMPIONSHIP& 2025 போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்துகெள்ள சட்ட உரிமை பாதுகாப்பு சங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு சட்ட உரிமை பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக 30 ஷீல்டுகள் வழங்க கௌரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட செயலாளர் எஸ் .பி ஜெகன் மாவட்ட அவை தலைவர் என் .சோமேஸ்வரன் மாவட்ட அமைப்பாளர் ஜெ ஹரி பிரகாஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்பச் செயலாளர் தே.சிவரஞ்சனி மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி பாண்டியராணி மாவட்டத் துணைச் செயலாளர் அண்ணாதுரை மாவட்ட தொழிற்சங்க செயலாளர் காந்தி மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் திருமதி சத்யா மணிசங்கர் அர்ஜுன் பாலசுப்பிரமணி அருணாச்சலம் சாமிநாதன் மற்றும் 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அரியூர் தங்ககோவில் வளாகத்தில் சக்தியம்மா ஜெயந்தி விழாவை முன்னிட்டு ரத்ததான முகாம்



வேலூர், டிச.29-

வேலூர் மாவட்டம் அரியூர் தங்க கோவில் வளாகத்தில் சக்தியம்மா ஜெயந்தி விழாவை முன்னிட்டு ரத்ததான முகாம் நூற்றுக்கும் மேற்பட்டோர் ரத்த தானம் வழங்கினர்.

வேலூர்மாவட்டம்,அரியூர் தங்க கோவில் வளாகத்தில் நாராயணி தங்க கோவில் நாராயணி மருத்துவமனை மற்றும் பக்த சபா சார்பில் தங்க கோவிலின் நிறுவனர் சக்தியம்மாவின் 50ஆவது ஜெயந்தி விழாவினை முன்னிட்டு நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று ரத்த தானம் செய்தனர் இம்முகாமினை வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் மேயர் சுஜாதா ஆகியோர் துவங்கி வைத்தனர் இவ்விழாவில் நாராயணி மருத்துவமனை நிர்வாக இயக்குநர் பாலாஜி,தங்க கோவில் அறங்காவலர் சுரேஷ் உள்ளிட்டோரும்திரளானோரும் ஆர்வமுடன் பங்கேற்று அதிக்கபடியான ரத்த கொடை வழங்கினார்கள் இதில் தானமாக பெறப்படும் ரத்தமானது ஆபத்து காலங்களில் ஏழை மக்களின் உயிர்களை காப்பாற்றும் என்பது குறிப்பிடத்தக்கது

# இலக்கியம்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதா ரமேஷ் பிறந்த நாளை முன்னிட்டு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா!



தருமபுரி, டிசம்பர். 29-

தருமபுரி மாவட்டம் இலக்கியம்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் என். சுதா ரமேஷ் 45- வது பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதைத் தொடர்ந்து பெண்களுக்கு தையல் மிஷின், சலவை பெட்டி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வாக் ஸ்டிக், 500 - பேருக்கு வேட்டி , சேலை ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இறுதியாக பொது மக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# கோவையில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் 49 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!




கோவை, டிச.29-

கோவை மாவட்டம், காரமடை காந்தி நகர் பகுதியில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் 49வது பிறந்த நாள் மற்றும் சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் 49 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதியில் உள்ள விவசாயிகள், 100 நாள் வேலை திட்ட பணியாளர்கள், நலிந்த பெண்களுக்கு தையல் மெஷின் என 7 ஆயிரம் பேருக்கு முதற் கட்டமாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் திமுக கோவை வடக்கு மாவட்ட செயலாளர் ரவி, மாநில மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி, தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று நலத் திட்ட உதவிகளை வழங்கி துவக்கி வைத்தனர். மேலும் மீதமுள்ள 42 ஆயிரம் பேருக்கு வீடுகள் தோறும் வழங்கப்படும் என டி.ஆர். எஸ் மேடையில் அறிவித்தார். நிகழ்வில் நகராட்சி தலைவர்கள் அறிவரசு, உஷா, நகர செயலாளர்கள் அஷ்ரப் அலி, முனுசாமி, குரு பிரசாத், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், சுரேந்திரன், பிரதீப், காந்தி, மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை தலைவர் மனோகரன்,மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ராமுகுட்டி, ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் தென்னை சிவா உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உட்பட தொண்டர்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# கே . ஆர்.பி. அணையில் பெருந்தலைவர் காமராஜர் சிலை : முதலமைச்சரிடம் பரிந்துரைக்குமாறு கி.வீரமணியிடம் முன்னாள் காங். தலைவர் எல் . சுப்பிரமணியன் மனு



கிருஷ்ணகிரி, டிச.29-

கிருஷ்ணகிரி நகருக்கு வருகை தந்த திராவிட கழகத் தலைவர் கீ.வீரமணி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வதற்காக வருகை தந்த திராவிட கழகத் தலைவர் கீ.வீரமணி அவர்களிடம் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களுக்காக குடிநீர் மற்றும் விவசாயத்திற்காக கே. ஆர்.பி. அணையினை கட்டி மாவட்டத்தை வளமாக்கிய பெருந்தலைவர் காமராஜரின் சிலையை அணையின் முன்பாக அமைக்க வேண்டும் என்று கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் மாவட்டத் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் கோரிக்கை மனுவினைக் கொடுத்தார். மனுவினை பெற்றுக்கொண்ட கீ.வீரமணி அவர்கள் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் வாழ்வாதரத்திற்காக அணை கட்டிய பெருந்தலைவர் காமராஜரின் நினைவாக அவரின் சிலை அமைக்க தமிழக முதல்வரிடம் பரிந்துரைக்கப்படும் என்று உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து பேசிய கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ தலைவர் எல். சுப்பிரமணியன் கே.ஆர்.பி.அணை கட்டி கிருஷ்ணகிரி , தர்மபுரி உள்ளிட்ட 5 மாவட்டத்தை வளமாக்கிய பெருந்தவர் காமராஜரின் நினைவாக அணையின் முன்பாக சிலை அமைக்கப்பட வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக போராடி வருகிறோம், ஆனாலும் இது வரை எந்த முன்னேறமும் இல்லை, இந்தநிலையில் கிருஷ்ணகிரி நகருக்கு வந்த கீ.வீரமணி அவர்களிடம் கே.ஆர. பி. அணையில் காமராஜரின் சிலை வைக்க தமிழக முதல்வரிடம் உரிய அனுமதி பெற்று தருமாறு மனு கொடுத்துள்ளோம், இது தொடர்பாக தமிழக முதல்வரிடம் எடுத்து கூறி அணையில் காமராஜரின் சிலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்து உள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சிலை அமைக்க உரிய அனுமதி கிடைத்தவுடன் காங்கிரஸ் கட்சி சார்பில் சிலை அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

அப்போது முன்னாள் நகர காங்கிரஸ் தலைவர் வின்செண்ட் மற்றும் தீராவிட கழகத்தினை சேர்ந்த பலர் உடன் இருந்தனர்.

# தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் (குலாலர்) மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கல்விப் பரிசளிப்பு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!



திருப்பூர், டிசம்பர்.29-

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் (குலாலர்) மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 9 ஆம் ஆண்டு கல்வி பரிசளிப்பு - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா லட்சுமி நகரில் உள்ள குலாலர் கல்யாண மண்டபத்தில் தலைவர் ஜெயராமன். செயலாளர் கன்னி முத்து. பொருளாளர் பாலசுப்பிரமணியம் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாநில தலைவர் டாக்டர் சேம நாராயணன் சிறப்புரையாற்றி செய்தியாளர்களை சந்தித்தார்.

அதில் பேசிய அவர் மண்பாண்டம் செய்யும் எங்களுக்கு பருவ மழை பெய்கின்ற காலகட்டத்தில் தமிழக அரசு தலா ரூ.5,000 வழங்கி வருகிறது அதனை 10.000 ரூபாயாக மாற்றி தர வேண்டும் எனவும் தொழிலாளர்கள் மின்சாரத்தில் இயக்கக்கூடிய சீலாவீல் மின்சக்கர இலவசமாக வழங்க வேண்டும் எனவும் பல்லாண்டு காலமாக வசித்து வருகின்ற தங்களுக்கு அடிமனை பட்டா வழங்க வேண்டும் மேலும்

களிமண் எடுப்பதற்கு அரசு இலவசமாக வழங்க வேண்டும் எனவும் மேலும் மின்சாரம் சலுகை வேண்டும் எனவும் மூன்று சதவிகித இட ஒதுக்கீடு தமிழக அரசு வழங்க வேண்டும் எனவும் மேலும் தங்கள் சமூகத்தினருக்கு தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றி யார் தருவார்களோ அவர்களுடன் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி மற்றும் ஜனவரி மாதம் சென்னை அருகே ஒரு லட்சம் பேர் பங்கேற்கும் மாபெரும் மாநாடு நடைபெற இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் பொதுமக்கள் சமைக்கும் உணவை மண்பாண்டத்தில் சமைத்து சாப்பிட்டால் அவர்களுக்கு ஆயுள் கூடும் மேலும் அவர்களுக்கு எந்த ஒரு நோய் நொடியும் வராது எனவும் பொதுமக்கள் அனைவரும் சமைக்கும்போது மண்பாண்டத்தினை உபயோகிக்க வேண்டுமென டாக்டர் சேம நாராயணன் கேட்டுக்கொண்டார் இந்த நிகழ்வில் மாநில துணைத்தலைவர் பாலசுப்ரமணியம். மாநில இணைச்செயலாளர் நாகராஜ். மாநில இளைஞரணி அமைப்பாளர் செந்தில்குமார். உள்ளிட்ட நிர்வாகிகள் 200க்கும் மேற்பட்டோர் பெரும் திரளாக பங்கேற்றனர் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.






# விளாத்திகுளத்தில் கிறிஸ்துமஸ்- ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி பந்தயம்



விளாத்திகுளம், டிசம்பர். 29-

தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம் தூத்துக்குடி செல்லும் சாலையில் கிறிஸ்துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு,சிதம்பர நகர் வாதிரியார் சமுதாய பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் நடத்தும் 2-ம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



**முதுகுளத்தூரில் விடுபட்ட வாக்காளர்கள் சேர்த்தல் முகாம் நடைபெற்ற போது அதிமுக செயலாளர் செந்தில்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.**

# தலைவலி தாங்காமல் பெண் தூக்கிட்டு தற்கொலை

சுசீந்திரம், டிச.29-

அடிக்கடி ஏற்பட்ட தலைவலியின் காரணமாக பட்டதாரி பெண் தூக்கும் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சுசீந்திரம் அருகே உள்ள கொத்தன் குளத்தைச் சார்ந்தவர் வெர்ஸ்லின் ஹரணி.23 இவர் பிஎஸ்சி நர்சிங் படிப்பு படித்து முடித்துள்ளார் இவருக்கு அடிக்கடி தலைவலி ஏற்பட்டுள்ளது இதற்காக சிகிச்சை பெற்று வந்த நிலையில் தலைவலி குணமாகாத மன வருத்தத்தில் இருந்து வந்துள்ளார் இந்நிலையில் நேற்று தனது படுக்கை அறையில் உள்ள மின்விசிரியில் சேலையால் தூக்கு போட்டு தொங்கிய நிலையில் கிடந்துள்ளார் இதனைப் பார்த்த அவரது தந்தை கதவை உடைத்து அவரை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சிகிச்சையில் சேர்த்து உள்ளார் ஆனால் மருத்துவர் ஏற்கனவே அவர் இறந்து விட்டார் என கூறியுள்ளனர் இது குறித்து அவரது தந்தை ஜான்சன் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# பைக் திருடிய இரண்டு பேர் கைது

பூதப்பாண்டி, டிசம்பர். 29-

பூதப்பாண்டியை அடுத்துள்ள அழகியபாண்டியபுரம் மேல்கரை பகுதியை சேர்ந்தவர் கிட்டாச்சி ஆப்பரேட்டர் தங்கேஸ்வரன் (42) இவர் இரண்டு நாட்களுக்கு முன்பு பிற்பகல் 2.00 மணியளவில் மேல்கரை மந்தை பகுதியில் தனது பைக்கை விட்டுவிட்டு அருகிலுள்ள தோட்டத்தில் செடிகளை அகற்றி முடித்து 5.30 மணியளவில் திரும்பி வந்து பார்க்கும் போது பைக்கை காணவில்லை அது குறித்து பூதப்பாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் போலீசார் இதுகுறித்து வழக்கு பதிவு செய்து விசாரிக்கும் போது அழகியபாண்டியபுரம் செம்பொன் விளை பகுதியை சேர்ந்த மெர்லின் பிரசாத் (37) மற்றும் மேல பிளவுகல் விளையை சேர்ந்த தர்மர் (52) என்பது தெரிந்தது உடனே பைக்கையும் பறிமுதல் செய்து இருவரையும் கைது செய்தனர்

# அருமனையில் பாஜக அலுவலகம் திறப்புவிழா

அருமனை, டிசம்பர். 29-

கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் பாஜக கட்சி அலுவலகம் ஒன்றியத் தலைவர் ஹரிஷ் குமார் தலைமையில் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எம்ஆர்.காந்தி கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த விழாவில் பாஜக மாநிலச் செயலாளர் மீனாதேவ், மேற்கு மாவட்ட தலைவர் சுரேஷ், மாவட்ட செயலாளர் ரெஜிலா ஐயப்பன், பொதுச் செயலாளர் நந்தினி,தேசிய மொழிப் பிரிவு தலைவர் சதீஷ் சந்திரன், மற்றும் சிறுபான்மை அணி தலைவர் விஜயகுமார் உட்பட மாநில,மாவட்ட பொறுப்பாளர்கள் தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நாகர்கோவிலில் மாபெரும் இரத்ததான முகாம்



நல்லூர், டிசம்பர். 29-

நாம் ஒருவர் அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு விழாவை முன்னிட்டு,நாம் ஒருவர் அறக்கட்டளை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து நாகர்கோவிலில் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.முகாமை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை உதவி ஆய்வாளர் திரு.துரை அவர்கள் துவக்கி வைத்தார், சிறப்பு விருந்தினர்களாக மாநகர போக்குவரத்து ஆய்வாளர் திரு.பேச்சிமுத்து, திமிங்கிளி தமிழ்நாடு சேப்டரின் தலைவர் பேராசிரியர்.கே.செய்யது அகமது கபீர்,பேராசிரியர் டாக்டர் நிபான்,டாக்டர் ராகேஷ், திரு.எம்.மதியழகன், டாக்டர்.கே.ராஷிப் கான், திரு .பால் அகியா ஆகியோர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில் வரவேற்புரையை நாம் ஒருவர் அறகட்டளையின் உறுப்பினர் செல்வி.எஸ்.ஸ்நேஹா அவர்கள் வழங்கினார். நாம் ஒருவர் அறக்கட்டளையின் தலைவர் திரு.தக்கலை ஏ.எஸ்.எம் பாபு தலைமை தாங்கினார் ,திரு.ஆஸ்டின் பெனட்,திரு.சேக் முகமது அனீஸ் முன்னிலை வகித்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.இந்நிகழ்ச்சியில் இரத்ததானம் மற்றும் உடல் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு சிறப்பு விருந்தினர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.இம்முகாமில் ஏராளமான இரத்தக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர் ,மேலும் இவ்விழாவில் இரத்த கொடையாளர்கள் மற்றும் இரத்தக் கொடையாளர்களை ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர் திரு.வைகோ குமார் அவர்கள் நாம் ஒருவர் அறக்கட்டளையின் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார்.இறுதியாக திரு.ரஞ்சித் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# குமரியில் வாக்காளர் பெயர் சேர்ப்பு சிறப்பு முகாம்கள் : மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு



நாகர்கோவில், டிச.29-

குமரி மாவட்டத்தில் குளச்சல், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் புதிய வாக்காளர் சேர்க்கும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்திலின் படி, 19.12.2025 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத குடிமக்கள் தங்களது பெயர்களை 17.02.2026 அன்று வெளியிடப்படும் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 01.01.2026-ஐ தகுதி நாளாகக் கொண்டு 18 வயது பூர்த்தியாகும் இளம் வாக்காளர்கள், ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாத வாக்காளர்கள், புதிதாக திருமணமாகி இடம்பெயர்ந்தவர்கள்/நிரந்தரமாக இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தங்கள் பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்திட, நீக்கம் செய்ய மற்றும் திருத்தம் மேற்கொள்ள சிறப்பு முகாம்கள் 27,28 ஆகிய நாட்களில் நடைபெற்றது. தொடர்ந்து வரும் 03.01.2026 மற்றும் 04.01.2026 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற உள்ளது.

அதன்ஒருபகுதியாக இன்று குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரீத்தாபுரம் பிராவிடன்ஸ் மேல்நிலைப்பள்ளி, அம்மாண்டிவிளை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கருங்கல் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் புதிய வாக்காளர் சேர்க்கும் சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு தாங்கள் படிவம்-6ஐ சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரிடமோ அல்லது இந்திய தேர்தல் ஆணைய இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து அதனுடன் பீமீநீறீணீகூஷீணீமீ வீஷீஸீ யீஷீகூஷீனீ இணைத்து, புகைப்படம் மற்றும் உரிய ஆவணங்களுடன் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் 18.01.2026க்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 சட்டமன்ற தொகுதிகளிலும் வசிக்கும் 18 வயது பூர்த்தியடைந்த இளம் வாக்காளர்கள் மற்றும் 19.12.2025 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத குடிமக்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை சரியாக பயன்படுத்தி தங்களது பெயர்கள் 2026 சட்டமன்ற தேர்தலுக்கு முன் வெளியிடப்படும் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்துகொள்ள தங்களது விண்ணப்பங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் கடைசி நாளான 18.01.2026க்குள் வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலரால் கேட்டுக் கொள்ளப்படுகிறது. உங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றிட இன்றே வாக்காளராக பதிவு செய்வீர்கள். என கூறினார். நடைபெற்ற ஆய்வில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், புதிய வாக்காளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# கருங்கலில் காமராஜர் வெண்கல சிலை ராஜேஷ்குமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



கருங்கல், டிச.29-

கருங்கலில் 1993 - ம் ஆண்டு அப்போதைய கிள்ளியூர் வட்டார இளைஞர் காங்கிரஸ் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜர் சிலை சிமெண்டால் அமைத்து பல ஆண்டுகள் ஆகியதாலும் காமராஜருக்கு வெண்கல சிலை அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் நிர்வாகிகள் கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ராஜேஷ் குமார் எம்.எல்.ஏ. சொந்த நிதியிலிருந்து அதே இடத்தில் காமராஜர் சிலை மறுசீரமைக்கப்பட்டு புதிய காமராஜர் வெண்கல சிலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தது. தற்போது வெண்கல சிலை அமைக்கும் பணிகள் முடிவடைந்ததையடுத்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தோற்றுவிக்கப்பட்ட 141 வது ஆண்டு விழாவும் கருங்கலில் காமராஜர் வெண்கல சிலை திறப்பு விழாவும் கருங்கலில் நேற்று நடைபெற்றது.

விழாவிற்கு தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவரும் கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினருமான ராஜேஷ்குமார் தலைமை வகித்தார். காங்கிரஸ் வட்டார தலைவர்கள் ரெகுபதி, விஜயகுமார், பால்ராஜ், கருங்கல் பேரூராட்சி தலைவர் சிவராஜன், பாலப்பள்ளம் பேரூராட்சி தலைவர் டென்னிஸ், காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், துணை அமைப்புகளின், தலைவர்கள், நிர்வாகிகள், கிராம கமிட்டி நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.